Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 / 303 / 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

பெங்களூர்-2.

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபால் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம். பிலவ வைகாசி 16 ஆம் நாள் துல்ஹஜ் 13 (29-5 61) திங்கட்கிழமை இதழ் 89

# வகுப்பு, மொழி வாதம்

## நேருஜி கண்டனம்

## "அண்டை மொழியை கற்பதில் கௌரவ குறைவு இல்லை"

துர்க்காபூர், மே 28

"வகுப்புவாத, மொழிவாத அடிப்படையில் தேச ஒற்றுமையைத் தோற்றுவிக்க முடியாது" என இங்கு ஆரம்பமான இரண்டு நாள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பேசிய பிரதமர் ஸ்ரீ நேரு அறிவுறுத்தினர்.

இந்தியப் பிரதமர் அஸ்ஸாமில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் பற்றியும் குறிப்பிட்டார்.

"இந்திய மொழிகளிலேயே வங்காள மொழிதான் சர்வதேச அந்தஸ்துப் பெற்ற மொழியாகும். கவி தாகூரின் இலக்கியங்கள் இதற்குக் காரணமாய் இருந்தன. அஸ்ஸாமில் வங்காள மொழி பற்றிய தவறான கருத்து ஏற்பட்டிருக்கிறது. அஸ்ஸாமைப் பொறுத்தவரை இரண்டும் இரட்டைச் சகோதர மொழிகள். ஐரோப்பாவில் 3 அல்லது 4 மொழிகளைக் கற்றுக்கொள்ள மக்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். நம் நாட்டிலோ நிலைமை வேறாய் இருக்கிறது. அண்டைமொழியைக் கற்பதைக்கூட கௌரவக் குறைவாகக் கருதுகிறோம்" என்றார் நேரு.

இந்தியக் கம்யூனிஸ்டுகளை வன்மையாகத் தாக்கிப் பேசிய பிரதமர், சீனர்கள் இந்தியாவுக்குள் நுழைந்து இன்னும் பல இடங்களைப் பிடித்தாலும் அவர்கள் வரவேற்பார்கள் என்றும், இங்கிலையில் நாடு எப்போதும் விழிப்புணர்ச்சியுடனிருக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

---

### மிகப்பெரிய எஃகுத் தொழிற்சாலை விரைவில் நிறுவப்படும்

கொழும்பு, மே 28

மிகப்பெரிய தொழிற்சாலைகளிலொன்றான இரும்பு எஃகுத் தொழிற்சாலையை நிறுவும் வேலைகளை அரசாங்கம் வெகு விரைவில் ஆரம்பிக்குமென்று தெரிகிறது.

இது சம்பந்தமாக இலங்கைக்கு வந்துள்ள சோவியத் அரசாங்கத் தூதுக்குழுவுடன், ஒப்பந்தத்துக்கான கைச்சாத்தை கைத்தொழில் அமைச்சு இவ்வாரத்தில் வைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சோவியத் பொருளாதார உதவித் திட்டத்தின் கீழ்தான் இந்தத்தொழிற் சாலை நிறுவப்படும்.

---

### திரு. லோகநாதன் யோசனை

#### ஆசிய தூரகிழக்கு கமிஷன் ஏற்றது

கொழும்பு, ஞாயிறு

சர்வதேச வர்த்தக ஸ்தாபனத்தின் ஆசிய தூரகிழக்குக்கான கமிஷனின் 10வது மகாநாட்டில், கமிஷனின் பகுதிகளில் அபிவிருத்தி சேமிப்பு வங்கிகள் நிறுவப்படவேண்டுமென, இலங்கை வங்கி ஜெனரல் மனேஜர் திரு. ஸி. லோகநாதன் கூறிய யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிரிட்டிஷ் பிரதிநிதி மகாநாட்டில் இந்த யோசனைக்கு ஆதரவு அளித்தார்.

---

### குருஷ்சேவுக்கு கென்னடி கூறுவது...

வாஷிங்டன், மே 28

சுதந்திரத்தைப் பாழாக்க விரும்பும் எவரையும் அமெரிக்கா எதிர்க்கும்என, வருகிற 3ம் தேதி தாம் சோவியத் பிரதமரைச் சந்திக்கும்போது கூறப்போவதாய் ஜனாதிபதி கென்னடி தெரிவித்தார்.

---

### லிஸ்பனில் பிரி—போர்த்துக்கல் மந்திரிகள் பேச்சு

லிஸ்பன், மே 29

பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி ஹோம்பிரபுவும், போர்த்துக்கல் வெளிநாட்டு மந்திரியும் லிஸ்பனில் சந்தித்துப் பேசுவார்கள் என்றும், ஆபிரிக்கா பற்றி அவர்கள் சம்பாஷிப்பார்கள் என்றும் கூறப்படுகிறது.

---

### புலியைத் தின்ற புலி

ஈரோடு, மே 28

தாளவாடி மலைப்பகுதியில் உள்ள காட்டில் ஒரு பெண் புலியை ஓர் ஆண் புலிகொன்று தின்றது.

ஆண்புலியொன்றும், பெண் புலியொன்றும் மிக உக்ரமான முறையில் சண்டையிட்டன. இறுதியில் பெண்புலி, இந்த ஜீவ-மரணப் போராட்டத்தில் சளைக்கவே, ஆண் புலி அதை அடித்துக்கொன்றதுடன் பெண்புலியின் தலையையும், ஒரு காலையும் தவிர மற்றைய பகுதிகளைத் தின்றுவிட்டது.

---

### தமிழில் 6 லட்சம் மணிஓடர் பத்திரங்கள்

சென்னை, மே 28

ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு மொழிகளில் 6 லட்சம் மணி ஓடர் பத்திரங்கள் ஜூன் 2-ம் திகதி முதல் சென்னை ராஜ்ய பொது மக்களுக்கு கிடைக்கும்.

தபால் இலாகாவின் வேண்டுகோளின்படி இந்த பத்திரங்கள் சென்னை அரசாங்க அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டுள்ளன.

---

### கென்னடியின் அவசரம்

வாஷிங்டன், மே 27

அமெரிக்க ஜனாதிபதி கென்னடி தனது பிறந்த நாளை அது வருவதற்கு முன்பே கொண்டாடி விட்டார்.

இதில் அவரது குடும்பத்தினரும் கலந்து கொண்டனர்.

வரும் திங்களன்று அவருக்கு 44 வயதாகின்றது. ஆனால் அன்று அவர் போஸ்டனிலும் அவரது குடும்பத்தினர் கிஷேன்ஜராவிலும் இருப்பர்.

---

### சாகும்வரை உண்ணாவிரதம்

அமிர்தசரஸ், மே 28

அகாலி தலைவர் மாஸ்டர் தாராசிங் சாகும்வரை உண்ணாவிரதமிருக்க முடிவுசெய்துள்ளதாகத் தெரியவருகிறது.

அகாலிகளின் பஞ்சாபி சுபா கோரிக்கைபற்றி அரசாங்கம் கடுமையான மனப்போக்குடன் இருப்பதால் உண்ணாவிரதத்தைத் தவிர தமக்கு வேறு ஒரு வழியும் இல்லை என திரு. தாராசிங் கருதுகிறாராம்.

இந்த உண்ணாவிரதம் எங்கு எப்பொழுது தொடங்கும் என்ற விபரங்கள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

---

### ஒழுங்கீனத்தை விசாரிக்க கமிஷன்

#### ரப்பர் ஆராய்ச்சி சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஞாயிறு

அகலவத்தையிலுள்ள ரப்பர் ஆராய்ச்சி நிலைய ஊழியர் சங்கமும் அதனுடைய உத்தியோகஸ்தர் சங்கமும் நிலையத்திலுள்ள ஒழுங்கீனம்பற்றி விசாரணை செய்ய ஒரு கமிஷனை நியமிக்குமாறு விவசாய மந்திரியைக் கேட்டுள்ளது.

தாம் சமர்ப்பிக்க விரும்பிய சில விபரங்களை நிர்ணய சபையால் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிட்டி நிராகரித்துவிட்டதாக ஊழியர் சங்கம் புகார் செய்துள்ளது.

நிலையத்தின் ஒழுங்கீனங்களை எடுத்துக் கூறிய உத்தியோகஸ்தரை சேவையில் வைத்திருக்கும்படி சபைக்கு அறிவிக்குமாறு மந்திரியை சங்கம் கேட்டுள்ளது. மேற்படி உத்தியோகஸ்தர் நிலையத்திலிருந்து விலக்கப்படுவார் என அஞ்சுவதாலேயே சங்கம் இவ்வாறு கேட்டுள்ளது.

---

### லண்டனில் இலங்கை பார்லிமெண்ட் தூதுகோஷ்டி

லண்டன், மே 28

திரு. ஸி. பி. டி' சில்வா தலைமையில் அமெரிக்கா புறப்பட்டுச் சென்ற இலங்கைப் பார்லிமெண்டரி தூதுகோஷ்டி இன்று லண்டன் வந்து சேர்ந்தது. 3 நாட்கள் லண்டனில் தங்கியபின் இக்கோஷ்டி அமெரிக்கா புறப்படும்.

---

### ஐ. நா. தர்ம கர்த்தா சபை

நியுயோர்க், மே 28

ஐ. நா. தர்மகர்த்தா சபை, தன் மேற்பார்வையில் இன்னும் மிஞ்சியிருக்கும் 7 நாடுகள் பற்றி சீக்கிரம் பரிசீலனை செய்யவிருக்கிறது.

---

## யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி பிரவேசப்பரீட்சை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி பிரவேசப் பரீட்சைகள் ஜூன் மாதம் 3-ம் திகதி ஆரம்பமாகின்றன. இப் பரீட்சைகள் யாழ்ப்பாணம் சிங்களப் பாடசாலையில் நடைபெறும். வர்த்தகத் துறைப்பாடங்களுக்கான பிரவேசப் பரீட்சை 3-ம் திகதியும், பொறியியல் துறைப் பாடங்களுக்கான பிரவேசப் பரீட்சை 10-ம் திகதியும் தொடங்கப்படுமெனத் தெரிகிறது. பரீட்சை அனுமதிச் சீட்டுகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப் பட்டுள்ளன.

ஆங்கில மொழி மூலம் கல்வி பெறுவோரிலும் தமிழ் மொழி [illegible]லம் கல்வி பெறுவோர் விண்[illegible]ப்பத் தொகை இவ்வாண்டு [illegible]கரித்துள்ளதாகவும், தமிழ் [illegible] மூலம் போதனை பெறு[illegible]ர சென்றாண்டிலும் இவ்[illegible] அதிகமாகத் தெரிவு [illegible]படவிருப்பதாகவும் [illegible]து.

தமிழ் மொழி மூலம் கல்வி பெற 200 பேரும் ஆங்கில மொழி மூலம் கல்வி பெற 75 பேரும் விண்ணப்பித்திருக்கின்றனர். சென்ற வருடம் ஆங்கில மொழி மூலம் கல்வி பெற 40 மாணவர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் இவ்வாண்டு இதற்கு 10 பேரே தெரிவு செய்யப்படுவரென அறியப்படுகிறது. கடந்த ஆண்டு தமிழ் மொழி மூலம் கல்வி பெற 10 மாணவர்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டிருந்த இடத்தில் இவ்வாண்டு 20 மாணவர் தெரிவு செய்யப்படவிருக்கிறார்களெனத் தெரிகிறது

போட்டிப் பிரவேசப் பரீட்சை, தகைமைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் முடிவுகளை ஆதாரமாகக் கொண்டே மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

---

## தென்கொரியாவில் மேலும் பலர் கைதாயினர்

ஸியோல், மே 28

தென் கொரியாவில் முன்னைநாள் பிரதமர் ஒருவரும், இரண்டு ஜெனரல்களும், நாட்டின் மிகப்பெரிய 24 வர்த்தகர்களும் கைதுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. அரசியல் கட்சிகளுக்கு நிதிஉதவி செய்ததாக இந்த வர்த்தகர்கள்மீது புரட்சி ராணுவ சபை சந்தேகம் கொண்டிருப்பதாய்க்கூறப்படுகிறது.

பூஸானில் 27 பத்திரிகை நிருபர்கள் கைது செய்யப்பட்டனர். 123 போலிசார் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். மேலும் 13 போலிஸ் அதிகாரிகள் ஒழுங்கீனக் குற்றச்சாட்டை முன்னிட்டு கைதாயினர்.

தென் கொரியாவில் முடிக்குரிய பிரதம வழக்கறிஞரை புரட்சி ராணுவப் படைகள் கைது செய்துள்ளன. மற்றும் 9 பேருக்கு 6 மாதம் முதல் 12 வருடம்வரை ராணுவ நீதி மன்றம் தண்டனை விதித்துள்ளது. முடிக்குரிய பிரதம வழக்கறிஞர், முன்னைய சாங் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்.

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.


## நன்றி

காலஞ்சென்ற திரு. இ. எஸ். பாலசுப்பிரமணியம் அவர்களது மரணச்சடங்கின்போது சமுகமளித்த நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

64, பண்ணை வீதி, யாழ்ப்பாணம். திருமதி கலாம்பிகை பாலசுப்பிரமணியமும் பிள்ளைகளும் குடும்பத்தினரும்


### வாடகைக்கு

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் 45 இலக்கத்தையுடைய இரு கடைகள் வாடகைக்கு கொடுக்கப்படும். விபரங்கட்கு: A. S. கனகரெத்தினம், 39/1, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

### ஸபாஸ் ஸ்ருடியோ நெக்கெற்றிவ்ஸ்

எமது ஸ்ருடியோ நெக்கெற்றிவ்ஸ் இலக்கம் 1 முதல் 15000 வரை இனிமேல் வைத்துப் பாதுகாக்கப்படமாட்டாது. அதற்கு உரியவர்கள் விரும்பினல் 10-6-61க்குமுன் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸபாஸ் 11, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய் *

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### ஆயுள்வேத அரிய மருந்துகள்

புற்றுநோயை (Cancer) வேரறுக்குமென செயல்மூலம் நிரூபிக்கப்பட்டமருந்து "யோகீஸ்வர ரசம்". தாய்க்குலத்தாருடைய பெரும்பாடு — வெள்ளை இறைத்தல் முதலியன எட்டு நேரத்துடன் குணமடையச் செய்யும் மருந்து "பெரும்பாடு நிவாரணி". தாமதமின்றி கலந்தாலோசியுங்கள்.

பொ. செல்லையா "புற்றுநோய் நிபுணர்", ஆயுள் வேத வைத்தியர், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

### ரேடியோ

உங்கள் ரேடியோவின் தொந்தரவுகளைச் சுலபமான முறையில் நீக்கிப் புதியது போல் திருத்தித் தருவதற்கு, ரேடியோ எஞ்ஜினியேர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


### ரயில் நேரம்

| யாழ்ப்பாணம் | கோட்டை |
|---|---|
| காலை 7-30 — | மாலை 7-00 |
| *பி. ப. 2-20 — | இரவு 10-05 |
| மாலை 5-43 — | காலை 5-15 |

| கோட்டை | யாழ்ப்பாணம் |
|---|---|
| *காலை 6-00 — | பி. ப. 1-30 |
| காலை 6-45 — | மாலை 5-55 |
| இரவு 8-35 — | காலை 6-55 |

* 'யாழ்தேவி'

## வெளிமாணவர்களுக்கு சர்வகலாசாலையில் பயிலும் வசதி
### பிரதமர் மேற்கொண்டுள்ள நடவடிக்கை

கொழும்பு, வியாழன்

வெளி மாணவர்கள் சர்வகலாசாலை வகுப்புகளில்சேரவும் வாசகசாலைகளை உபயோகித்துக் கொள்ளவும் வசதியளிக்குமாறு பிரதமர் தம்மைக் கேட்டுக்கொண்டதாய் நீதி மந்திரி திரு.ஸாம்.பி-ஸி.பெர்ணண்டோ செனட் சபையில் தெரிவித்தார். இது சம்பந்தமாக கல்விமந்திரி திரு. பதியுதீன் முகம்மது, பல்கலைக்கழக துணை வேந்தருடன் பேச்சுக்கள் நடத்தியும், மந்திரி சபைக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்குமாறு பிரதமர் அவரைக் கேட்டிருப்பதாயும் தெரிவிக்கப்பட்டது.

செனட் சபை மே மாதம் 30ந் திகதி ஒத்தி வைக்கப்பட்டது.

## மட்டக்களப்பு கூட்டுறவு சமாஜம்

மட்டக்களப்பு, புதன்

திரு. கே. டப்ளியு. தேவநாயகம் தலைமையில் நடைபெற்ற மட்டக்களப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சமாஜக் கூட்டத்தில் சமாஜம் ஒரு இலட்ச ரூபாய் பெறுமதியில் கட்டத் திட்டமிட்டிருக்கும் கட்டிடத்தைத் தாமதமின்றிப் பூர்த்தி செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வேலைகள் முடிவுறும் வரை சமாஜம் அரசாங்க சுங்க இலாகாக் கட்டிடத்தில் இயங்கி வரும்.

## "நாட்டின் நலன் காக்க அனைவருக்கும் உரிமையுண்டு"

றக்குவானை, மே 26

"நாட்டுப்பற்று என்பது தனிப்பட்ட மதத்திற்கோ அன்றி இனத்திற்கோ கட்டுப்பட்டதொன்றல்ல. தனது தாய் நாட்டைக் காப்பாற்றுவதில் ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமை இருக்கிறது" என்று கொடகாவெல மகாவித்தியாலயத்தின் விஞ்ஞான ஆய்வுக் கூடத்தைத் திறந்துவைத்துப பேசுகையில், கல்வி மந்திரி திரு. பதியுதீன் மஹ்மூத் கூறுனர்.

தொடர்ந்து பேசுகையில் கல்வி மந்திரி பின்வருமாறு குறிப்பிட்டார்:

நாட்டின் நலன் குறித்து, அரசாங்க நிர்வாகங்களில் பங்கு கொள்ள சிறுபான்மை சமூகத்தினருக்கு உரிமையிருக்கிறது.

ஆசிரியர்கள், தங்களது இடமாற்றம் குறித்து, எம். பி.க்கள் மூலமும், மற்றும் பலபேர் மூலமும் விண்ணப்பிப்பதை விட்டுவிடவேண்டும். இதனல் இவர்கள் தங்களது தகுதியினின்றும் கீழ்நோக்கிச் செல்லுகின்றார்கள்.

# யாழ்ப்பாணம் - மலையாளம் புகையிலை ஒப்பந்தம்
## நீடிப்பதற்கு கேரள அரசாங்கம் விருப்பம்

யாழ்ப்பாணம், திங்கள்

**யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலை ஒப்பந்தத்தை நீடிப்பதற்கு கேரள அரசாங்கம் இசைந்திருப்பதாகவும் அது இப்பொழுது இந்திய அரசாங்கத்தின் பரிசீலனையிலிருப்பதாகவும் தெரிகிறது. இந்திய அரசாங்கமும் இதற்குத் தனது அங்கீகாரத்தை வழங்குமென நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது. இதன்படி இவ்வாண்டு 1225 கண்டி புகையிலையை யாழ்ப்பாணம் மலையாளத்துக்கு அனுப்பலாமெனத் தெரியவருகிறது.**

திருவனந்தபுரம் 'இராஜ் பவனில்'ல் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருக்கும் யாழ்ப்பாணம் மலையாள புகையிலை ஐக்கியவியாபாரச்சங்கத் தூதுகோஷ்டி இவ் விபரத்தைத் தெரிவித்தது.

ஆவணி மாதத்தோடு முடிவடையும் ஒப்பந்தத்தை ஒரு வருஷத்துக்கு நீடித்துத் தரும்படி இத் தூதுக்குழு இந்திய அரசாங்கத்தைக் கேட்டுள்ளது. முன்பு இரு அரசாங்கங்களுக்குமிடையே செய்யப்பட்டிருந்த ஒப்பந்தப்படி இந்திய அரசாங்கம் அதில் குறிப்பிட்டுள்ள தொகை பீடியை இங்கு அனுப்பியிருந்தபோதிலும், தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளினல் குறிப்பிட்ட தொகை புகையிலையை அனுப்புவதற்குப்பதில் குறைவான தொகையே அங்கு அனுப்பப்பட்டுள்ளது. காலவரையறை முடிவடைந்தாலும் ஒப்பந்தப்படியுள்ள புகையிலையை அனுப்ப காலத்தை நீடித்துத் தரும்படி இத்தூது கோஷ்டி கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

இறக்குமதிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கும் திருவனந்தபுரம் துறைமுகம் இயற்கைக் காரணங்களால் கார்த்திகை வரை இனிமேல் உபயோகிக்க முடியாமையாலும், இங்கு இதனைப் பாகம்பண்ணுவதற்கேற்ற கடல்நீர் கார்த்திகைக்குப்பின் தை மாதத்திற்கிடையிலே கிடைப்பதாலும் 1962-ம் ஆண்டு மாசி, பங்குனி மாதங்களில் புகையிலையை மலையாளத்துக்கு அனுப்புவதற்கு 7 மாதத்தவணை தருமாறும் இத் தூதுகோஷ்டி கோரியுள்ளதாம்.

இத் தூதுகோஷ்டியில் சங்கத் தலைவர் திரு. ஆர். சி. எஸ். குக், காரியதரிசி திரு. கே. நடராசா ஆகியோர் சென்றிருந்தனர். இவர்களோடு முன்னாள் தபால் மந்திரி திரு. எஸ். நடேசனும் இப் பேச்சுவார்த்தைகளின் போது முக்கிய பங்கெடுத்துக் கொண்டார். இத் தூதுகோஷ்டியினரின் கோரிக்கைகளுக்கு கேரள கவர்னர் திரு. கிரியும் இந்திய இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டு உதவி அதிகாரியும் தங்கள் அங்கீகாரத்தை அளித்திருப்பதாகவும் அது டில்லிக்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

மலையாள மக்கள் யாழ்ப்பாணப் புகையிலையை அதிகம் விரும்புகிறார்களென்றும் கேரள அரசாங்கம் யாழ்ப்பாணம் சம்பந்தப்பட்ட மட்டில் அதிக அக்கறைகாட்டுவதாகவும் தூதுகோஷ்டியினர் மூலம் தெரியவந்தது.

மலையாளத்துக்கு புகையிலையை அனுப்பலாமா என்ற சந்தேகத்தில் யாழ்ப்பாணக் கமக்காரர் தாம் நினைத்தபடி புகையிலையைப் பாகம்பண்ணுவதாகவும் இச்சங்கத்துக்கு குறிப்பிட்ட தொகை புகையிலை அனுப்புவதற்குக் கிடைக்காது போகுமென்றும் சிலர் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலை ஐக்கிய வியாபாரச்சங்கத் தூது கோஷ்டியொன்று டில்லிக்குச் செல்லுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

## யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி
### வேறிடத்துக்கு மாற்றம்?

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரி இம்மாதம் முதலாந் திகதியுடன் யாப்பாணம் சிங்களப் பாடசாலைக்கு இடம்பெயருமென அறியப்படுகிறது. இதற்கான அறிவித்தலை வித்தியாபகுதி அனுப்பியுள்ளதாம்.

நியூஸிலாந்து அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஏழுலட்ச ரூபாய் செலவில் இக்கல்லூரிக்கென்றே நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தையும் பொறியியல் துறைக்கான உபகரணங்களையும் உபயோகிக்க முடியாது இப்பொழுது கோப்பாய் அரசினர் மகாவித்தியாலயத்தில் குடிபுகுந்திருக்கும் இக்கல்லூரி வகுப்புகள் சிங்களப் பாடசாலைக்குக் கொண்டு செல்லப்படவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## பெற்றோர்- ஆசிரியர் சங்கம்

காத்தான்குடி, ஞாயிறு

"இப்பகுதியிலுள்ள பெரும்பாலான மாணவிகள் உயர்தரக் கல்வி கற்பதற்காக மட்டக்களப்பிலுள்ள பாடசாலைக்குச் செல்லவேண்டியிருப்பதால் இம்மாணவிகள் பலவித கஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள். எனவே கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயத்தில் மாணவிகளை மேல்வகுப்புகளில் அனுமதிக்க வழிசெய்யவேண்டும்" என்ற தீர்மானம் கல்லடி உப்போடை, சிவானந்த வித்தியாலப் பெற்றோர்-ஆசிரிய சங்கத்தில் நிறைவேற்றப்பட்டது.

## புதிய சமாதான நீதவான்

முள்ளியவளை, ஞாயிறு

ஓய்வுபெற்ற கிராமவிதானையும், முள்ளியவளைக் கிராமச் சங்கத்தின் தற்போதைய தலைவருமான திரு. வெற்றிவேலு அண்ணமலை சமாதான நீதவாகை நியமிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு நீதவான் முன்னிலையில் அவர் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

சென்னை, மே 26

ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் உணவுக் கலப்படம் சம்பந்தப்பட்ட 71 வழக்குகளை சென்னை நகரசபை பதிவுசெயதது. இவற்றுள் 57 வழகுகள் பாலில் தண்ணீர் கலந்தது சம்பந்தமானவை.

இந்த வழக்குகளில் மொத்தம் ரூ. 5,860 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## சாராய விலை குறைப்பு
### பௌத்த காங்கிரஸ் சிபார்சு செய்யாது

கொழும்பு, வெள்ளி

சாரயத்தின் விலையைக் குறைப்பதற்கு பௌத்த காங்கிரஸ் சிபார்சு செய்யமாட்டாது என்று பௌத்த காங்கிரஸ் காரியதரிசி திரு. லீலானந்த கல்தேரா தெரிவித்தார்.

சட்டவிரோத மதுபான ஒழிப்பு சம்பந்தமாக கேள்விகள் பலவற்றைக் கொண்ட ஒரு பிரசுரத்தை தனிப்பட்டவர்களுக்கும் மகில சமிதிகளுக்கும் கிராமமுன்னேற்றச் சங்கங்களுக்கும் தாங்கள் அனுப்பியதாகவும் தங்களுக்குக் கிடைத்த பதிலிலிருந்து சாராயத்தின் விலையைக் குறைப்பதற்கு பெருந்தொகையான மக்கள் எதிர்ப்பதாகத் தெரிகிறது என்றும் திரு. கல்தேரா கூறினர்.

சட்டவிரோதமதுபானத்தின் விளைவு பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்குத் தாங்கள் ஒருகுழுவை நியமித்துள்ளதாகவும் அந்தக்குழுவின் சிபார்சுகளை உள் நாட்டு கலாசார விவகார அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படுமென்றும் திரு. கல்தேரோ கூறினர்.

## "3ம் ஐந்தாண்டுத் திட்டம் பெரியது என்பது தவறு"
### —தேசாய்

டில்லி, மே 26

"இந்தியாவின் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் அளவுக்குமீறிப் பெரிதாக இருப்பதாய் வெளி நாடுகளிலுள்ள பலர் குற்றம் சாட்டுகின்றனர். ஆனல் இது தவறு" என இந்திய நிதி மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் இங்கு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

அமெரிக்கா வருடமொன்றுக்கு 4500 கோடி டாலர் பாதுகாப்புச் செலவுக்காக செலவு செய்கிறது. இந்தியா தனது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு 2300 கோடி டாலரே செலவு செய்கிறது. இந்தியாவின் வறுமையை ஒழிக்க 100 கோடி டாலரை அமெரிக்கா உதவுவது அதற்குப் பெரியதொரு காரியமல்ல. வெளிநாட்டுதவி இல்லாவிட்டாலும் கூட இந்தியாவில் வறுமையை ஒழிக்க நாம் போராடியே தீருவோம்."

## இந்தியாவில் 15 சிகரெட் தொழிற் சாலைகள்

புதுடில்லி, மே 26

புகையிலை உற்பத்தியில் அமெரிக்கா, சீன ஆகிய நாடுகளுக்கு அடுத்த ஸ்தானத்தை இந்தியா வகிப்பதுடன் மட்டுமின்றி, உலக வாணிகப் பொருள் ஏற்றுமதியில் ஐந்தாவது ஸ்தானத்தையும் இந்தியா வகிக்கிறது.

சென்ற 1956, 1957-ம் ஆண்டுகளில் ஒருகோடி ஏக்கர் நிலத்தில், இந்தியா 685 கோடி இருத்தல் புகையிலையை உற்பத்தி செய்துள்ளது.

இந்நாட்டில் 15 சிகரெட் தொழிற்சாலைகள் இருப்பதுடன் ஒரு வருடத்துக்கு 26,000 கோடி சிகரெட் துண்டுகளை உற்பத்தி செய்கின்றன.

இத்தொழிற் சாலைகளில், ஆறு தொழிற்சாலைகள் பம்பா[illegible] யில் இருக்கின்றன. மற்றை[illegible] வைகளில், ஆந்திரப் தேசத்தில் மூன்[illegible] மேற்கு வங்காளத்தில் [illegible] றும், மைசூர், பிஹார், உ[illegible] பிரதேசம் ஆகிய இட[illegible] ஒவ்வொரு தொழிற்ச[illegible] நிறுவப்பட்டிருக்கிறது.

# துர்க்காபூரில் பொலிஸ்-தொழிலாளர் கைகலப்பு

## பொலிஸ் அதிகாரிகள் தாக்கப்பட்டனர்

### கல்வீச்சு, பஸ் வண்டிக்கு தீ

### 60 தொழிலாளர் கைது

புதுடில்லி மே 28

துர்க்காபூரில் நேற்று எஃகுத் தொழிலாளருக்கும் பொலிசாருக்குமிடையில் ஏற்பட்ட ஒரு கைகலப்பில் ஒரு பொலிஸ்காரர் கத்தியால் குத்தப்பட்டார். பொலிஸ் சுப்ரிண்டென்ட் கையால் அடிக்கப்பட்டார்; உதவிப் பொலிஸ் சுப்ரிண்டென்ட் தடியால் தாக்கப்பட்டார். பஸ்கள் தாக்கப்பட்டன. ஒரு பஸ் தீவைத்துக் கொளுத்தப்பட்டது. காங்கிரஸ் கமிட்டி மகாநாட்டு தோரணவாயில் தீவைக்கப்பட்டது.

துர்க்காபூரில் இன்று ஆரம்பமாகவிருக்கும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் மகாநாட்டில் கலந்து கொள்ள காங்கிரஸ் தலைவர்கள் துர்க்காபூர் வந்து சேருகின்றனர்.

அஸ்ஸாம் ராஜ்ய மொழியாக வங்காள மொழியையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கோரி கச்சார் ஜில்லாவில் ஏற்பட்ட கிளர்ச்சியின் காரணமாக இம் மாதம் 19ந் திகதி சில்சாரில் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பதினொரு பேர் உயிரிழந்தனர். சில்சார் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு ஆட்சேபம் தெரிவிப்பதற்காக, எதிர்க்கட்சியினர், துர்க்காபூரில் காங்கிரஸ் தலைவர்கள் வந்து சேர்ந்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி அதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

நேற்று துர்க்காபூரில் சில்சார் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து ஊர்வலம் ஒன்று நடை பெற்றது. இந்த ஊர்வலத்தில் சுமார் 30,000 மக்கள் கலந்து கொண்டனர். இந்த ஆட்சேப ஊர்வலத்தை ஒழுங்கு செய்த எதிர்க் கட்சியினர் பின்னர் தனித்தனியாக ஆட்சேபக் கூட்டங்கள் நடத்தினர்.

**தொழிலாளர்களுடன் கைகலப்பு**

ஆட்சேபக் கூட்டங்களில் ஒன்று கிராண்ட் ட்ரங் வீதியில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இச் சமயத்தில் ஆலைகளிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த எஃகுத் தொழிலாளர் ஆட்சேபக் கூட்டத்தினரை வழிவிடுமாறு கேட்டுக்கொண்டனர். கூட்டத்தினர் தங்கள் கூட்டம் முடிவடைந்தபின்னரே இடம் விடமுடியுமென்று கூறினர். இதைத் தொடர்ந்து கூட்டத்தினருக்கும் தொழிலாளருக்குமிடையில் சிறு சண்டை மூண்டது.

தொழிலாளருக்கும் ஆட்சேபக் கூட்டத்தினருக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பைத் தடுத்து நிறுத்துவதற்கு பொலிசார் தலையிட்டனர். சண்டையைத் தடுத்து நிறுத்துச் சென்ற பொலிசாரை தொழிலாளர்கள் தாக்குவதற்கு ஆரம்பித்தனர்.

தொழிலாளர்களைக் கலைப்பதற்கு பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்தனர். தொழிலாளர்கள் அருகிலுள்ள வயல்களுக்கு ஓடி மறைந்திருந்து கொண்டு பொலிசார் மீதும் அப்பாதையால் சென்ற பஸ் வண்டிகள் மீதும் கல் வீசித் தாக்க ஆரம்பித்தனர்.

பின்னர் அப்பாதையில் நின்ற மூன்று பஸ்களைக் கடுமையாகத் தாக்கியதுடன் ஒரு பஸ்வண்டிக்குத் தீவைத்துக் கொளுத்தினர். துர்க்காபூரில் இன்று ஆரம்பமாகவிருக்கும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்துக்காக அமைக்கப்பட்டிருந்த பந்தலின் முகப்புத் தோரணத்துக்குத் தீவைத்தனர்.

இக் கைகலப்பின் போது பொலிசார் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டார்; பொலிஸ் சுப்ரிண்டென்ட் கைகளால் அடிக்கப்பட்டார்; உதவிப் பொலிஸ் சுப்ரிண்டென்ட் தடியடிக்குள்ளானர். பொலிஸ் வாகனம் ஒன்றும் தாக்கப்பட்டது.

இக் கைகலப்பு சம்பந்தமாக 60 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

நிலைமை கட்டுக்கடங்கி விட்டது என்று பொலிசார் நள்ளிரவில் விடுத்த ஒரு அறிக்கை கூறியது.

---

## அல்ஜீரிய புரட்சித்தலைவர்கள் இராணுவ நீதிமன்றம் விசாரணை

பாரிஸ், மே 28

அல்ஜீரியாவில் சமீபத்தில் முடிவடைந்த புரட்சியை நடத்தியதாகக் கைது செய்யப்பட்டுக் காவலில்வைக்கப்பட்டுள்ள இரண்டு மாஜி ஜெனரல்களும் அடுத்தவாரம் இராணுவஉயர் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படுவர்.

புரட்சியை நடத்தியதாகக் கருதப்பட்ட நான்கு மாஜி ஜெனரல்களில் இருவர் இன்னும் தலைமறைவாக இருக்கின்றனர். கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள சாலேயும் செல்லரும் இராணுவ உயர்நீதிமன்றத்தில் ஒன்பது நீதிபதிகள் முன்னிலையில் விசாரணை செய்யப்படுவர்.

இவர்கள் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் விசாரணையின் போது நிரூபிக்கப்பட்டால் இவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படும்.

---

## குருஷேவ் வியன்னாவுக்கு புறப்பட்டார்

மாஸ்கோ, மே 28

அமெரிக்க ஜனதிபதி திரு. கென்னடியை அடுத்த சனிக்கிழமை வியன்னாவில்சந்தித்துப் பேசுவதற்காக சோவியத் பிரதமர் திரு. நிகிட்டா குருஷேவ் மாஸ்கோவிலிருந்து வியன்னாவுக்கு நேற்றுப்பிரயாணமானர்.

ஜூன் மாதம் மூன்றாந்திகதியும் நான்காம் திகதியும் இரு தலைவர்களும் சந்தித்துப்பேசுவார்கள். முதல்நாள் சந்திப்பு வியன்னாவிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் காரியாலயத்திலும் இரண்டாம்நாள் சந்திப்பு வியன்னாவிலுள்ள ரஷ்ய ஸ்தானிகர் காரியாலயத்திலும் நடைபெறும்.

முதல்நாள் சந்திப்பின்பின் ஆஸ்திரிய ஜனதிபதி இரு தலைவர்களுக்கும் இரவு விருந்துபசாரமளித்து கௌரவிப்பார்.

---

## 1963-ல் ஜி. ஸி. ஈ. பரீட்சை கடைசியாக நடைபெறும்

கொழும்பு, வெள்ளி

லண்டன் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை (ஜி. ஸி. ஈ.) 1963-ம் ஆண்டு கடைசியாக நடைபெறும் என்று பரீட்சைப்பகுதி கமிஷனர் அறிவித்துள்ளார்.

---

## அமெரிக்கா குற்றச்சாட்டு

### பதட்லாவோ பிரதிநிதிகள் மறுப்பு

ஜெனிவா, மே 28

லாவோஸில் கம்யூனிஸ்ட்களான பதட்லாவோ பிரிவினர் சண்டைநிறுத்தஉடன்பாட்டை மீறுவதாக அமெரிக்கா நேற்றுக்குற்றம் சாட்டியது.

லாவோஸுக்கான கட்டுப்பாட்டுக்கமிஷன் தனது பணியைச் செய்வதற்கு பதட்லாவோ படையினர் இடையூறு செய்வதாகவும் மேமாதம் 13-ந் திகதியிலிருந்து 27-ந் திகதிவரை 30 தடவைகள் சண்டைநிறுத்த உடன்பாட்டை அவர்கள் மீறிவிட்டதாகவும் அமெரிக்கா நேற்று ஜெனிவாவில் விடுத்த ஒரு அறிக்கையில் கூறியது.

அமெரிக்காவின் இக் குற்றச்சாட்டை ஜெனிவாவிலுள்ள பதட்லாவோ பிரதிநிதிகள் மறுத்ததுடன் ஜெனிவா மகாநாட்டைக் குழப்புவதற்கு அமெரிக்கா முயற்சி செய்வதாகவும் குற்றம் சாட்டினர்.

---

## 25 வருடக் கரு சுண்ணும்பாக மாறியது

ரங்கூன், 28

மத்திய பர்மாவில் 54 வயதுள்ள ஒரு பெண் 25 ஆண்டுகளாகக் கர்ப்பவதியாக இருந்து 3 இருத்தல் எடையுள்ள சுண்ணும்புக்கட்டியாக மாறிய ஒரு குழந்தையைப் பெற்ருர். 25 வருடகாலமாக அப்பெண் அவ்வப்போது வயிற்றுவலியாற் கஷ்டப்பட்டதாகக் கூறினர்.

ஆஸ்பத்திரியில் பரிசோதனை செய்தபோது அவள் வயிற்றில் சுண்ணும்பாகிய ஆண்குழந்தை இருப்பதைக்கண்டு அதனை அகற்றினர். ஓர் அடிநீளமுள்ள அக்குழந்தை 3 இருத்தல்நிறையிருந்தது.

---

## தூத்துக்குடி துறைமுகம் அபிவிருத்திக்கு 5 கோடி ரூபாய்

சென்னை, மே 28

இந்தியாவின் மூன்ருவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் எல்லாப் பருவ காலத்துக்கும் ஏற்ற வகையில் தூத்துக்குடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய மத்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தூத்துக்குடி துறைமுகத்தின் அபிவிருத்திக்காக ஐந்துகோடி ரூபாய் மத்திய அரசாங்கம் ஒதுக்குமென்று தமிழ்நாடு அரசாங்கம் அறிவித்துள்ளது.

---

# தென்னுபிரிக்காவில் அவசரகால நிலை

## வீதிகளில் இராணுவம் நடமாட்டம்

ஜோகன்னர்ஸ்பர்க், மே 28

தென்னுபிரிக்காவில் அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினரும் பொலிசாரும் வீதிகளில் ரோந்து சுற்றிவருகின்றனர். பெருந்தொகையான வெள்ளையர்கள் படைக்குத்திரட்டப்பட்டுள்ளனர்.

புதன்கிழமை தென்னுபிரிக்கா குடியரசு நாடாகிறது. தென்னுபிரிக்க அரசாங்கத்தின் நிறவெறிக்கொள்கையைஎதிர்த்து அகில ஆபிரிக்க தேசிய இயக்கத்தினர் தென்னுபிரிக்க குடியரசுதினக் கொண்டாட்டங்களைப் பகிஷ்கரிக்குமாறும் தென்னுபிரிக்கா குடியரசாகும் தினத்தோடு மூன்று தினங்கள் ஆபிரிக்கர்கள் வெளியில் செல்லாது வீட்டிலிருக்கவேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆபிரிக்கர்கள் அமைதியாக வீட்டில் தங்கியிருக்கவேண்டுமென்றும் வெளியில் செல்லக்கூடாதென்றும் அகில ஆபிரிக்க தேசியத் தலைவர் விடுத்துள்ள வேண்டுகோளை தென்னுபிரிக்காவில் பொதுவேலைநிறுத்தத்தை ஆரம்பிக்கவும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தவும் எடுக்கப்படும் ஒருமுயற்சியாக தென்னுபிரிக்க அரசாங்கம் கருதுகிறது.

தேசிய இயக்கத்தினரின் இந்த முயற்சியை ஒடுக்கும் நோக்கத்துடன் தெற்கு டர்பன் நகரில் நேற்று ஒலிபெருக்கி இணைக்கப்பட்ட பொலிஸ் வாகனங்கள் ஆபிரிக்கர்கள் எல்லோரும் வழக்கம்போல் வேலைக்குச் செல்லவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தன. பொலிசுடன் இராணுவத்தினரும் வீதிகளில் ரோந்து சுற்றி வருகின்றனர்.

இராணுவத்தினர் அழைக்கப்பட்டதுடன் பொலிஸ்படையும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

தென்னுபிரிக்காவின் முக்கிய பகுதிகளிலும் முக்கிய காவல் ஸ்தானங்களிலும் வெள்ளைச் சிப்பாய்களே காவலுக்குவைக்கப்பட்டுள்ளனர்.

தென்னுபிரிக்காவில் குடியரசு எதிர்ப்பு நடவடிக்கைகளை அடக்கி ஒடுக்கும் முயற்சியாக இதுவரை பெருந்தொகையானேர் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

**பந்தோபஸ்துசபை கூடவேண்டும்**

தென்னுபிரிக்க அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப்பற்றி விவாதிக்க பந்தோபஸ்துசபையின் விசேஷ கூட்டத்தைக் கூட்டவேண்டுமென்று லைபீரியா கேட்டுள்ளது.

‘சிரநேத்திரஞ்சனத் தைலம்’
விடுதலையளிக்கும்போது
நீங்கள்
சிரசு கண் மூக்கு
சம்பந்தமான வியாதிகளினல் துன்புறவும்
வேண்டுமா ?
தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்த
ஒவ்வொரு 20 சொட்டுப் பிரமாணமும்
ஆச்சரிய பலனையளிக்கும்!
காலம் நீடித்த நோயாளர் எம்மிடம் தொடர்பு
கொள்ளவும்.
மு. க. ஜெகநாதன்
யூனனி கண் நிபுணர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.

அழகிய பெனியன்! கால்மேஸ்!!
“லேடன்” தயாரிப்பு
யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!
பல தினுசுகள்! பல அளவுகள்!!
எங்கும் கிடைக்கும்.
Leyden
L.I.L
இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!
அதற்கு வழி “லேடன்” பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.
உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனுட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது
“லேடன்” பெனியன்களும், கால்மேஸ்களும்
தொழிற்சாலை
7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### மணிவாக்கு

நன்மை செய்தால் மட்டும் போதாது. நன்மையன முறையில் அந்த நன்மையைச் செய்தல் வேண்டும்.

—கொன்பூஷியஸ்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு வைகாசி மீ 16௳ (29-5-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.


## விஸாவரியின் பலாபலன்

சென்ற வெள்ளிக்கிழமை பார்லிமெண்ட் சபையிலே மூன்று முறையும் அவசரமாக நிறைவேறிய விஸாவரி மசோதாவின் நோக்கம், அரசாங்கத்துக்கு அதிக வருமானம் பெறுவதே என்று நிதி மந்திரி தெரிவித்தார். இதன்மூலம் எவ்வளவு வருமானத்தை அரசாங்கம் எதிர்பார்க்கின்றதென்பது தெரியவில்லை.

வருஷத்தில் 400 ரூபாய் வரி செலுத்தச் சம்மதித்து வெளிநாட்டிலிருந்து இங்கு புதிதாக யாரும் வேலைக்கு வருவார்களா என்பது சந்தேகம். மேலும் இலங்கையில் வேலையில்லாக்கஷ்டம் அதிகரித்து வருவதால், புதிய விஸாவரி செலுத்தினாலும், இங்கு கட்டுப்பாடின்றி அரசாங்கம் யாரையும் குடியேற அனுமதிக்கவும் முடியாது. இந்நிலையில் இம்மசோதா மூலம் வருமானத்தை அரசாங்கம் எதிர்பார்ப்பதாயின், அது ஏற்கனவே இலங்கையிலே விஸாவாங்கி வசிப்பவர்கள் மூலமாயேஇருக்கமுடியும்.

விஸாவின்மீது இலங்கையில் வசிக்கும் 26000 பேர்களில் பெரும்பாலோரும் சொற்ப வருமானமுள்ள சிறிய கடைக்காரர்களும் சிப்பந்திகளுமே. வியாபாரப் பதிவுக் கட்டணத்தை ரூ. 1000 என்று இம்மாதம் உயர்த்தியும், விஸா கட்டணம் ரூ. 400 என்று விதித்தும் இருப்பதால், சம்பந்தப்பட்ட சிறியவர்த்தகர்களில் பலர் கடைகளை மூடிவிட்டோ அல்லது விற்றுவிட்டோ இந்தியாவுக்குத் திரும்புவதாகத் தெரிகிறது. சிப்பந்திகளுக்கும் சொற்ப சம்பளமேயாதலால், அவர்களில் பலர் வருடத்தில் ரூ. 400 கொடுக்க முடியாது. குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்ற விஸாக்காரர்களில்பலர் இப்புதிய வரியை மனைவி முதலியவர்களுக்கும் செலுத்தமுடியாமல், நாட்டைவிட்டு வெளியேறத் தீர்மானிப்பதாயின் அதில் வியப்பில்லை.

ஆகவே விஸா பெற்றுள்ளவர்களில் எளிய மக்கள், புதிய வரிகள் காரணமாக வெளியேறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அவர்களில் பலரும் வெளியேறுவதாயின், அரசாங்கத்துக்கு இதன்மூலம்வருமானம் மிகக்குறைவாகவே கிடைக்க முடியும். ஆகவே வருமானத்துக்காகவே விஸா வரியை நிதிமந்திரி கூறியதுபோல் விதித்துள்ளதாயின, அந்த நோக்கம் கைகூடுவது மிகவும் துர்லபமாகும்.

ஏற்கெனவே இலங்கையிலே உள்ள இந்தியர்கள் தொடர்ந்து தடையின்றி தொழில் நடத்திவர அனுமதிக்கப்படுவார்களென்று பெரிய சேனநாயக்கா, நேருஜிக்கு, முன்னரே உறுதி கூறியுள்ளதுடன், இங்கு 55 வயது வரை தொழில் நடத்த இந்தியருக்கு அனுமதியளிக்கப்படுமென்று நேரு – கொத்தலாவலை ஒப்பந்தம் கூறுவதாயும், இப்புதிய விஸா வரி அந்த உறுதிமொழிக்கும் ஒப்பந்தத்துக்கும் மாறுகுமென்றும் கட்டாயமாக வெளியேற்றுவதாகுமென்றும் விவாதத்தின் போது சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் இது நிதி அமைச்சரின் செவிகளில் ஏறவில்லை. இதுபோன்ற விஷயங்களில் அவசரப்பட்டு முன் யோசனையின்றிக் காரியங்கள் செய்வது இலங்கைக்கு நல்லதன்று.

பிறநாட்டினருக்கு இலங்கை விஸா வரி விதிப்பதாயின், மற்ற நாடுகளும் இலங்கையர் மீது இதேபோல் வரி விதிக்கவோ, அல்லது வேறு தடை நடவடிக்கை எடுக்கவோ கூடும். ஏற்கெனவே இலங்கையில் வேலை கிடைக்காமல் அதிகமான வாலிபர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லுகின்றனர். இலங்கையில் விஸா வரியை அதிகமாக விதிப்பதாயின், மற்ற நாடுகள் இலங்கை மக்களுக்கு மாறாக கதவை மூடித் தாளிடக்கூடும். நம் வாலிபர்களுக்கு உலகில் எங்குச் சிறப்பாக இந்தியாவில் காராளமாகச் சென்று வசித்து தொழில் செய்ய முடியாமற் போகும். நாளாவட்டத்தில் மற்ற நாடுகளின் அபிமானத்தையும் நாம் இழக்கக்கூடும். ஆகவே இவ்விஷயங்களையெல்லாம் தீர்க்கதரிசனத்துடன் சிந்தித்துப் பார்த்து, அரசாங்கம் புனராலோசனை செய்து, இம்மசோதாவை அமுலுக்குக் கொண்டுவருவதை ஒத்திவைப்பது இலங்கைக்கும் இலங்கை மக்களுக்கும் நல்லதாகும்.

# சிறை வாழ்வில் காந்திஜி கையாண்ட சிக்கனம்

— சங்கர்லால் பாங்கர் —

**திரு. சங்கர்லால் பாங்கர் பல ஆண்டுகள் மகாத்மாவுடன் கூட இருந்தவர். 'நவஜீவன்', 'யங் இந்தியா' முதலிய பத்திரிகைகளில் ஆசிரியராகப் பணியாற்றியவர். எரவாடா சிறையில் பாபுவுடன் இருந்த போது நடைபெற்ற நிகழ்ச்சியைப்பற்றி இங்கு எழுதுகிறார். இக்கட்டுரை வார்தாவிலிருந்து வரும் "ராஷ்டிரபாரதி"யில் வெளிவந்தது. திரு. ஏ. வி. வேதராமன் இதனைத் தமிழாக்கியுள்ளார்.**

எரவாடா சிறையில் பாபு தம்முடைய அறையைத் தாமே சுத்தம் செய்து வந்தார். இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு பாபுவிடம் "உங்கள் அறையைச் சுத்தம் செய்யும் பணியை என்னிடம் கொடுங்கள்" என்று கேட்டுக் கொண்டேன்.

அவர் ஒப்புக் கொண்டார். நான் முதலில் அவர் அறையைச் சுத்தம் செய்வேன். பிறகு என் அறையைச் சுத்தம் செய்வேன். இரண்டொரு நாட்கள் இவ்விதம் கழிந்தன. மீண்டும் காந்தியடிகள் ஒரு நாள் என்னிடம் கூறினார்: "நீங்கள் தவருக நினைக்காமலிருந்தால் ஒன்றுசொல்வேன். அதாவது இனிமேல் என் அறையை நானே சுத்தம் செய்து கொள்கின்றேன்."

"ஏன்" என்று கேட்டேன் நான்.

"உங்கள் வேலை என்னவோ சரியாக இருக்கிறது. ஆனாலும் கொஞ்சம் கூட அசுத்தம் இல்லாமல் இருந்தால்தான், எனக்குச் சரியாக இருக்கிறது. நீங்கள் சுத்தம் செய்கிறீர்கள். சில சமயம் மூலை முடுக்கில் தூசுகள் தங்கிவிடுகின்றன. துப்புரவோ சரியான துப்புரவாகவே இருக்க வேண்டும். புத்தகங்களையும் அலமாரியில் இருந்து எடுத்துச் சுத்தம் செய்ய வேண்டும்" என்று கூறினார் மகாத்மா.

இதை நினைவு வைத்துக் கொண்டு "இனிமேல் நீங்கள் சொன்ன பிரகாரம் எல்லாம் சரியாகச் செய்கிறேன்" என்று கூறினேன்.

### எதிலும் சிக்கனம்

இதற்குப் பிறகு அவர் உடைகளைத் துவைக்கும் வேலையையும் செய்ய அனுமதி கோரினேன். அதையும் செய்ய அனுமதி கிடைத்தது. உடைகள் பாலைப்போல் வெண்மையாக இருக்க வேண்டும். இதை நன்ருகக் கவனத்தில் வைத்துக் கொண்டேன். பிறகு வெய்யிலில் உலர்த்தி மடித்து எடுத்து வைத்தேன்.

ஒருநாள் இதைப்பற்றி பாபு பேச்செடுத்தார். "நீங்கள் துணிகளைத் துவைக்கும் வேலைகளை விட்டுவிடுங்கள். நானே துவைத்துக் கொள்கிறேன்" என்ருர்.

"இதிலும் ஏதாவது குறை கூறக் காரணம் இருக்கிறதா என்ன?" என்று பாபுவிடம் கேட்டேன்.

"உடைகளை சுத்தமாகத்தான் துவைக்கிறீர்கள். ஆனால் சோப்பு அதிகம் செலவாகிறது என்று எனக்குத்தோன்றுகிறது. நீங்கள் சோப்பை எவ்வளவு நாளைக்குச் செலவிடுகிறீர்களோ அதைவிட நான் இருமடங்கு நாட்களுக்குச் செலவிடுகிறேன்" என்று கூறினர் பாபு.

"இனிமேல் சமாளித்துச் செலவு செய்கிறேன். என்னுடைய எண்ணம் என்னவெனில் சோப்பு செலவானலும் பரவாயில்லை, உடைகள் பிரகாசமாக இருக்கவேண்டும் என்பதுதான். ஆனல் அதிலும் சிக்கனமாக வேலைசெய்யும் கவனம்வேண்டும். இதை நான் கற்றுக் கொண்டுவிட்டேன்" என்றேன்.

### தீப்பெட்டி விஷயம்

அவர் தண்ணீரையும், பாலையும் சுடவைப்பதற்காக அடுப்பு கொடுத்திருந்தார். ஆரம்பத்தில் 'அரிக்கன்' விளக்கு கிடைக்கவில்லை. பிறகு அதுவும் கிடைத்தது. அதைக்கொளுத்துவதற்காகத் தீப்பெட்டியும் கொடுக்கப்பட்டது. ஒரு பெட்டி முடிந்ததும் புதிய தீப்பெட்டி கிடைக்கும்.

ஒருநாள் காந்தியடிகள் என்னிடம் கேட்டார்:- இந்தப் பெட்டி எவ்வளவு நாட்களுக்கு வருகிறது?

"இந்தப்பெட்டி முடிந்ததும் மற்ருெரு பெட்டி, எடுத்துக் கொள்ளுகிறேன் என்று கூறினேன்.

"நாம் பெட்டிகளின் குச்சிகளை எண்ணிக்கொள்ளவேண்டும் ஒரு நாளில் வெவ்வேறு வேலைகளுக்கு எத்தனை குச்சிகள் தேவை என்று இதைப் பற்றியும் யோசிக்கவேண்டும்" என்ருர் தேசபிதா.

அவர் எண்ணிவிட்டு என்னிடம் சொன்னார்: ஒருக்கால் இந்தவிதமாகச்செலவழித்தால் ஒரு பெட்டி ஒரு வாரம் வர வேண்டும்.

ஆனல் நான் அவரிடம், "இந்தவிதமாக எண்ணிக்கொண்டு நடப்பது கஷ்டம். மழைக்காலத்தில் தீப்பெட்டி 'நமுத்து'ப்போய்விடுகிறது. ஒன்று பற்றிக்கொள்கிறது, மற்ருென்று பற்றுவதில்லை. பிறகு காற்று வீசுவதால் அணைந்துவிடுகிறது. இருந்தபோதிலும் சமாளித்து குறைந்தபட்சம் குச்சிகள் செலவுசெய்ய முயற்சி செய்வேன்" என்றேன்.

# லண்டன் மாநகரில்

## மாணவர் மகிழ்வுச் சுற்றுலா

கல்விபயில பிரிட்டனுக்குச் செல்லும் ஆயிரககணக்கான வெளிநாட்டு மாணவர்கள் லண்டன் நகரைச் சுற்றிப்பார்க்க விரிவான, வசதியான ஏற்பாடுகள் அவ்வப்போது செய்யபடுகின்றன.

விளையாட்டுக்களும் மகிழ்வுச் சுற்றுலாக்களும் மாணவர் மனத்தை விரிவுபடுத்துகின்றன என்று பிரிட்டிஷ் ஆசிரியர்கள் கருதுகிருர்கள். அதனல், அவ்வப்போது மாணவர்களை அழைத்துக் கொண்டு வெளியிடங்களுக்குச் செல்கிருர்கள். பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களிலும் தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் பயிலவரும் வெளிநாட்டு மாணவர்கள் பிரிட்டனில் இரண்டு அல்லது மூன்ருண்டுகள் தங்க நேரிடுகின்றது. இவர்கள் பொதுவாக இருபது வயதுக்குட்பட்டவர்கள். ஆகையால் வீட்டு நினைவு தோன்ருதிருக்கவும் பிரிட்டனை நன்ருகத் தெரிந்து கொள்ள வாய்ப்பளிக்கும் நோக்கத்துடனும் அவ்வப்போது வெளியிடங்களுக்குச் சென்று திரும்ப ஏற்பாடு செய்யப்படுகிறது.

லண்டனைச் சுற்றிப்பார்ப்பதில் இளைஞர்களுக்கு விருப்பம் அதிகம். பனிக்காலத்தில் அவர்கள் நகரத்தின் மத்தியில் உள்ள பழங்காலக் கட்டடங்களுக்கும் அரும்பொருள் காட்சியங்களுக்கும் விஜயம் செய்கிருர்கள். கோடை காலத்தில் புறநகர்ப்பகுதியில் உள்ள இயற்கை எழில்மிக்க இடங்களைக் காணச் செல்கிருர்கள்.

### டெலிவிஷன்

வெளிநாட்டு மாணவர்களும் மாணவிகளும் லண்டனிலுள்ள டெலிவிஷன் ஸ்ருடியோக்களைப் பார்வையிடும் வாய்ப்பைத் தவறவிடுவதில்லை. டெலிவிஷன் நிகழ்ச்சிகளைக்கண்டு மகிழும் அவர்கள், அந்த நிகழ்ச்சிகளை எப்படித் தயாரிக்கிருர்கள் என்பதைத் தெரிந்துகொள்வதிலும் ஆர்வமுள்ளவர்களாகத்தான் இருக்கிருர்கள்.

### செய்தித்தாள் காரியாலயங்கள்

டெலிவிஷன் ஸ்டூடியோக்களுக்கு அடுத்தபடியாக மாணவர்கள் விரும்பிச் செல்லும் இடங்கள் பிளீட் தெருவிலுள்ள தினத்தாள் அலுவலங்கள். அங்கு அவர்கள் செய்தியை வாங்குவதிலிருந்து அச்சுக்கோர்த்துப் பத்திரிகை வெளிவருவது வரையில் ஒவ்வொரு கட்டத்தையும் ஆர்வத்துடன் கவனிக்கிருர்கள். ஆங்காங்குள்ள ஊழியர்களிடம் விளக்கம் கேட்டுத் தெரிந்துகொள்ளுகிருர்கள்.

ஒரு சில மாணவர்கள் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனை, பார்லிமெண்ட் முதலிய இடங்களுக்குச் செல்வதுண்டு. பார்லிமெண்டுக்குச் செல்லும் மாணவர்களை வழிகாட்டிகள் காமன்ஸ் சபைக்கும், பிரபுக்கள் சபைக்கும், உறுப்பினர்கள் தங்கும் அறைகளுக்கும் அழைத்துச் செல்வார்கள். சில சமயங்களில் இந்தப் பொறுப்பை பார்லிமெண்ட் உறுப்பினர்களே ஏற்றுக்கொள்வதுமுண்டு.

### அரண்மனை குதிரைலாயம்

பக்கிங்ஹாம் அரண்மனைக்கு அருகிலுள்ள குதிரை லாயத்தைப் பார்வையிடுவதில் பலருக்கு மகிழ்ச்சி ஏற்படுவதுண்டு. இங்கு மகாராணியின் குதிரைகளும் அரசாங்க வைப

(5ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

சில மாதங்களுக்கு முன்பாக வண்ணை சிவன் கோவிலில் வஜ்ரவேலு முதலியாரவர்கள் ஒரு சைவப் பிரசங்கம் செய்தார்கள். தற்செயலாக அங்கு சென்றிருந்தேன். பிரசங்கம் முடிந்ததும் கோவில் மணி அடித்தது. உள்ளே பூசை நடந்தது. எல்லாருடனும் சென்றேன். சட்டை போட்டிருப்பதை மறந்துவிட்டேன்.

முன்பின் தெரியாத அன்பர் ஒருவர், "என்னையா, படிச்ச நீங்களே இந்த மாதிரி செய்யலாமா? சட்டை போட்டுக் கொண்டு கோவிலுக்குள் வரலாமா?" என்று சற்றே உணர்ச்சியுடன் பேசினர்.

"மறந்து விட்டேன் மன்னிக்க வேண்டும்" என்று சொல்லித் திரும்பிவிட்டேன்.

* * *

மறுநாள் காலை ஆபீசுக்கு டெலிபோன் வந்தது. "நேற்று கோவிலில் உங்களை யார் என்று தெரியாமல் ஏதோ பேசிவிட்டேன், வருந்துகிறேன். நேரில் உங்களை வந்து பார்க்கவேண்டும்" என்று கேட்டார். "வருந்த ஒன்றுமேயில்லை. வாருங்கள்" என்றேன். சில நிமிடங்களில் வந்தார் அவர் மனமுருகி, நேரிலும் வருத்தம் தெரிவித்தார்

"ஐயா, நானல்லவா வருந்த வேண்டும். உங்கள்மாதிரி சைவ வீரர் ஊருக்கு ஒருவராவது இருக்கவேண்டும். அப்போதுதான் கோவிலில் பயபக்தியும் ஒழுங்கு முறையும் சமயாசாரமும் நன்ருக இருக்கும். எனக்கு நல்ல பாடம் புகட்டினீர்கள். அதற்காக நன்றி. இனி ஜன்மத்திலும் இத்தவறை செய்யமாட்டேன்" என்றேன். அது முதல் இருவரும் நண்பராகிவிட்டோம். இறைவன் எவ்வித திருவிளையாடல்களெல்லாம் செய்வது நமக்குப் புதிய நண்பர்களைக் கூட்டுகின்ருன்! முதலில் தீமையாகத் தோன்றியதும் பின்னர் நன்மையாகவே முடிகிறது!

* * *

அந்த அன்பர் நேற்று வேலணை முடிப்பிள்ளையார் கோவிலில் தேர்த்திருவிழா நடப்பதாகவும் அதற்கு வருமாறும் அன்புடன் அழைத்திருந்தார்.

அவசரகாலச் சட்டம், ஊரடங்குச் சட்டம் முதலியவற்றுல் ஆபீசுக்குள்ளேயே இருந்து மனம் புழுங்கிக்கொண்டு இருக்கையில், திருவிழா அழைப்பு ஒரு விடுதலை அளிப்பதுபோலிருந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து வேலணைக்கு பண்ணையைக் கடந்து செல்லுகையில், அந்த 'டிரைவ்' மனதுக்கு எவ்வளவோ இன்பமாக இருந்தது.

* * *

வேலணையை நெருங்கினேம் முடிப்பிள்ளையார் என்று ஏன் பெயர் வந்ததென்று கேட்டேன். இந்தப் பக்கத்திலேயே முதல் முதலாக கோபுரமும் ஸ்தூபியும் வைத்த புராதன பிள்ளையார் கோவில் இதுதானென்று ஓரன்பர் விளக்கினர். கோவில் சின்னதுதான் என்ருலும் கருங்கல் திருப்பணி. காலியிலிருந்து கடல் மூலமாக இக்கோயிலுக்கு இக் கருங்கற்கள் வந்து சேர்ந்தனவாம்! பல தமிழ், சைவப் பெரியார்கள் அவதரித்த புனித இடமென்றும், இன்றும் இந்த ஊர் வைசவத்துக்கும் தமிழுக்கும் ஒரு பண்ணையாக விளங்குவதாயும் அன்பர்கள் பெருமையுடன் கூறினர்.

* * *

என் மனதை அங்குபெரிதும் கவர்ந்தது, அங்கு கூடிய மக்களின் சிறப்பாக தாய்மார்களின் பக்திதான், தெய்வம் என்ருல் தங்கள் உயிரையும் கொடுக்கவும் அவர்களெல்லாரும் தயாரென்றுதோன்றியது.

(5 ம் பக்கம் பார்க்க)

# தனிப்பட்ட ‘வான்’ சேவையுடன் போட்டி போட முடியாது

## இ. போ. சபைத் தலைவர் அறிக்கை

கொழும்பு, ஞாயிறு

“தனிப்பட்டவரின் “வான்” போக்கு வரத்துச் சேவை இலங்கை போக்குவரத்துச் சபையினுல் போட்டிபோட முடியாத ஒருவித சேவை” என்று இலங்கை போக்கு வரத்துச் சபைத் தலைவர் திரு. ஆர். ரி. டி' சில்வா ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

“தனிப்பட்ட வான்காரர் கொழும்பு-கண்டி, கொழும்பு-மாத்தறை, கொழும்பு-காலி, கொழும்பு-அநுராதபுரம், கொழும்பு-மட்டக்களப்பு போன்ற நீண்ட தூரப்பகுதிகளுக்கு விசேஷ முறையில் போக்கு வரத்துச் சேவை செய்கின்றனர். இந்த வான் காரர்கள், இ. போ. சபையின் பஸ்வண்டிகள், பஸ்நிலையத்திலிருந்து புறப்படும் அதே சமயம் அல்லது அதற்குச் சிறிது நேரத்துக்கு முன்னர் அல்லது பின்னர் புறப்படுகின்றனர். 14 அல்லது 16 பிரயாணிகள் கொள்ளக்கூடிய இந்த வாகனங்கள் பிரயாணிகள் ஏறியதும் புறப்பட்டுவிடுகின்றன.

இந்த தனிப்பட்ட வான்கள் சாதாரணமாக ஒரு மணிக்கு 40 அல்லது 50 மைல் வேகத்தில் பிரயாணம் செய்கின்றன. சில சமயங்களில் இதையும் விட அதிக வேகத்தில் செல்கின்றன. இதன் விளைவாக சபையின் பஸ் வண்டிகள் போய்ச்சேர வேண்டிய இடத்துக்கு அரை மணி நேரம் அல்லது முக்கால் மணி நேரத்துக்கு முன்பாகச் சேர்ந்து விடுகின்றன. பஸ்வண்டிகளைப் பொறுத்த வரையில வேகக் கட்டுப்பாட்டைக் கடைப் பிடிக்க வேண்டியது அவசியம்.

தனிப்பட்ட வான்காரர் தனது ஊழியர்களுக்கு சரியான ஊதியம் கொடுக்கவோ, வேலைத் தலம், கராஜ் நிலையங்கள் ஆகியவைகளை வைத்துப் பேணவோ, போக்கு வரத்து வீதிகளில் தனக்கு உத்தியோகத்தர்களை நியமித்து வைத்திருக்கவோ, கண்டக்டர்களை வைத்திருக்கவோ வேண்டிய அவசியம் கிடையாது. இதனுல் தனிப்பட்ட ‘வான்’காரர்களுக்கு மேலதிக செலவும் இல்லை. தனிப்பட்ட வானின் கிளீனராகவும்கண்டக்டராகவும் கடமையாற்றுபவர் வேலையற்றிருக்கும் ஒருவராகையால் அவர் குறைந்த ஊதியத்துடன் திருப்தி அடைந்து கொள்கிருர்.

தனிப்பட்ட வான்காரர் எவரும் இன்ஷுரன்ஸ் போன்றவைகள் கட்ட வேண்டியதில்லை. இந்த வானில் பிரயாணம் செய்யும் பிரயாணி ஒருவர் காயமடைந்தால் அல்லது பிரயாணி ஒருவர் வான்விபத்துக்குள்ளாகி மாண்டுபோனுல் அவருக்கோ அல்லது அவரின் பராமரிப்பிலுள்ள குடும்பத்தினருக்கோ நஷ்டஈடு கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் தனிப்பட்ட வான் சொந்தக்காரருக்கு இல்லை. ஆனல் இலங்கைப் போக்குவரத்துச் சபையைப் பொறுத்தவரையில் போதியளவு இன்ஷுரன்ஸ் கட்டணம் செலுத்தவும் சபையின் பஸ் வண்டியில் பிரயாணம் செய்யும் ஒரு பிரயாணி சிறிது காயமடைந்தாலும், பஸ்வண்டியிலுள்ள பெயர்ப் பலகை தலையில் விழுந்து காயமேற்படுத்திலுைம் கூட நஷ்டஈடு கொடுக்க வேண்டும்.

எனவே “வான்” போக்கு வரத்துச் சேவையுடன் இலங்கை போக்குவரத்துச்சபையின் சேவையை ஒப்பிடுவது நியாயமாகாது. இன்று தனிப்பட்ட போக்குவரத்துச் சேவையுடன் போக்குவரத்துச் சபையின் சேவை முறையை ஒப்பிடுவதும் நியாயமாகாது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் திறமைக் குறைவுதான் தனிப்பட்ட ‘வான்’ சேவையின் வெற்றிக்குக் காரணம் என்று கூறுவது தவறு. இலங்கைப் போக்குவரத்துச்சபை அளிக்க முடியாத ஒருவித போக்கு வரத்துச் சேவையைத் தனிப்பட்ட வான்காரர் அளிப்பதால் அந்தச் சேவையைத் தொடர்ந்து செய்ய அனுமதிக்க வேண்டுமென்று கூறுவது எவ்வளவு தவறே அதே போன்றதுதான் சபையின் திறமைக் குறைவினுல் தனிப்பட்ட வான் சேவை வெற்றியளிக்கக் காரணம் என்று கூறுவது.

தனிப்பட்ட வான்காரர் சபையின் வருமானத்தைப் ‘பிடுங்கிக்’ கொள்கின்றனர். இந்தத் தனிப்பட்ட வான் சேவையைப் போஷிப்பவர்களுக்கு வசதியளிக்கக் கூடிய விதமாக சபையின் சேவையில் பல மாற்றங்கள் செய்ய சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகிறது. தனிப்பட்ட “வான்” காரரின் சவாலை எதிர்நோக்க சாத்தியமான வரை நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளேன்.” இவ்வாறு சபைத் தலைவர் திரு. ஆர். ரி. டி' சில்வா தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## இ. போ. ச. ஊழியர்மீது நடவடிக்கை

கொழும்பு, ஞாயிறு

தனிப்பட்டவர்களின் “வான்” மூலம் பிரயாணிகளை ஏற்றிச்செல்வதில் இலங்கைப் போக்கு வரத்துச் சபை ஊழியர்கள் ஈடுபட்டிருக்கிருர்களா என்பதைக் கண்டுபிடிக்க இலங்கைப் போக்கு வரத்துச் சபை முயற்சி எடுத்துள்ளது.

இலங்கைப்போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான ‘பஸ்’ களுக்குப் பேரட்டியாக சில இ. போ. ச. ஊழியர்கள் சொந்த “வான்” வைத்திருக்கிருர்களென்றும், அவற்றை இ. போ. ச. பஸ்களுக்கெதிராகப் பிரயாணிகளை ஏற்றிச் செல்ல உபயோகப்படுத்துகிருர்களென்றும் அண்மையில் கூடிய ஆலோசனைக் கமிட்டியின் அங்கத்தவர்கள் சிலர் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து தான் மேற்கண்ட நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டது.

இ. போ. ச.வில் கடமையாற்றும் எந்த ஊழியராவது தனிப்பட்ட சொந்த “வான்” மூலம் பிரயாணிகளை ஏற்றிச்செல்வதில் ஈடுபட்டால், அவர்களுக்கெதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று இ. போ. ச. அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

## அல்ஜீரியாவை பிரிக்கும் யோசனை

### மொராக்கோ எதிர்ப்பு

மொராக்கோ, மே 28

அல்ஜீரியாவைப் பிரிக்கும் எந்த யோசனையையும் மொராக்கோ எதிர்க்கும் என்று மொராக்கோ அரசாங்கத்தின் தகவல் மந்திரி தெரிவித்தார்.

அல்ஜீரியாவைப் பிரிப்பதனுல் அங்கு சண்டை நின்றுவிடாதென்றும் இதனுல் வடக்கு ஆபிரிக்காவிலும் சண்டை பரவுமென்றும் அவர் கூறினர்.

## கலை அரங்கம்

### கல்லூரி மாணவன் எஸ். எஸ். ஆர்.

குடும்ப பாசத்தை அடிப்படையாக வைத்து ‘தெய்வப் பிறவி’ கே. எஸ். கோபால கிருஷ்ணன் கதைவசனம் எழுதியுள்ள ஒரு புதிய சமூகப் படத்தை மொடர்ன் தியேட்டர்ஸ் ஸ்தாபனத்தார் தயாரிக்கவிருக்கின்றனர்.

இரும்புப் பட்டறையில் வேலை செய்து தன் தம்பிக்காகத் தியாகம் செய்யும் அண்ணனுக டி. எஸ். முத்தையா நடித்த காட்சிகள் சில சமீபத்தில் படமாக்கப்பட்டன.

முத்தையாவின் தம்பியாக, கல்லூரி மாணவனுக எஸ். எஸ். ராஜேந்திரன் நடித்து வருகிருர். எம். ஆர். ராதா, எஸ். வி ரங்கராவ், சௌகார் ஜானகி, விஜயகுமாரி, சாயிராம் ஆகியோர் நடித்துவரும் இப்படத்துக்கு விரைவில் பெயரிடப்படவிருக்கிறது. கே. வி. மகாதேவன் இசையமைக்கும் இப்படத்தை ஏ. சுப்பாராவ் டைரக்ட் செய்கிருர்.

## இந்திரா என் செல்வம்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

னுடைய செயலை நினைத்து மனம் வருந்தும் காட்சிதான் அது.

ஜெமினி சந்திரா, நாகேஷ், கருணநிதி, புஷ்பமாலா ஆகியோரும் நடித்து வரும் இப்படத்தின் திரைக்கதை வசனத்தை விருதை ந. இராமசாமி எழுதுகிருர். இதுவரை இப்படம் 10,000 அடிகளுக்கு மேல் வளர்ந்துள்ளதாம்.

## செந்தாமரை வளர்கிறது

(8ம் பக்கத் தொடர்ச்சி)

கறிஞராகவும் எஸ். எஸ் ராஜேந்திரன் வாழ்க்கையில் தோல்வியுற்ற மன அதிர்ச்சியின் காரணமாகப் பைத்தியம் பிடித்தவராகவும் நடிக்கிருர்.

ஏ. பீம்சிங் முதல் முதல் ‘டைரக்ட்’ செய்யும் பொறுப் பேற்றதும் இரா. அரங்கண்ணல் முதன்முதல் கதைவசனம் எழுதியதும், புகழ்பெற்ற இசையமைப்பாளர்கள் முதன் முதலாக இசையமைக்க ஒப்பந்தம் செய்துகொண்டதும ‘செந்தாமரை’தான்.

## ‘முத்து மண்டபம்’

### எஸ். எஸ். ஆர். தயாரிக்கும் படம்

“முத்துமண்டபம்” என்ற நாடகத்தை இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் திரைப்படமாகத் தயாரிப்பார்.

மதுரை சித்திரைப் பொருட்காட்சி கலை அரங்கில் நடிகர் எஸ். எஸ். ஆர். குழுவினர் ‘தென்பாண்டி வீரன்’ என்ற நாடகத்தை நடித்துக் காட்டினர். நாடக முடிவில் நடிகர் ராஜேந்திரன் பேசுகையில் பின்வருமாறு தெரிவித்தார்:–

‘தங்கரத்தினம்’ திரைப்படம் வெளிவந்த பிறகு இப்பொழுது ‘முத்துமண்டபம்’ என்ற நாடகத்தை திரைப்படமாகத் தயாரிக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறேன். இந்த நாடகத்தில் வரும் வசனம் இதன் அமைப்பு முதலியவற்றைப் பற்றிய தங்கள் கருத்துக்களைத் திரைப்பட ரசிகர்கள் எனக்குத் தெரிவிக்கலாம். ‘முத்து மண்டபம்’ திரைப்படமாக்குவதற்குத் தகுதிவாய்ந்தது தானு? என்பது பற்றியும் எழுதலாம். பெரும்பாலான ரசிகர்களின் கருத்து எவ்வாறுள்ளதோ அதை அடிப்படையாக வைத்துத்தான் ‘முத்து மண்டபம்’ திரைப்படமாக்கப் படும்.

## லண்டன் மாநகரில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வங்களில் உபயோகிக்கும் வண்டிகளும் இருக்கின்றன. மகாராணி முடிசூட்டிக்கொள்ளப் பவனி வந்தபோது உபயோகித்த தங்க முலாம் பூசிய சாரட்டும் இங்கு தான் இருக்கிறது.

சில மாணவர்கள் லண்டன் நகரசபைத் தலைவர் வசிக்கும் மான்ஷன் ஹவுஸ் உலகிலேயே மிகப்பெரிய இன்ஸுரன்ஸ் அலுவலகமான லாயிட்ஸ் முதலிய இடங்களைப் பார்வையிடுவர். கலையார்வமுள்ள மாணவர்கள் டேட்காலரி, வால்ஸ் கலெக்ஷன், விக்டோரியா ஆல்பர்ட்மியூசியம், கவென்ட்பார்க், கலைஅரங்கு முதலிய இடங்களுக்குச் செல்வதுண்டு. வேறு சிலர் லண்டன் நகரத்திலுள்ள மாபெரும் பால்பண்ணைகளையோ ரொட்டிக்கிடங்குகளையோ பார்வையிடச் செல்வதுண்டு.

### 90 நாடுகளிலிருந்து

மாணவர்களுக்காக ஏற்பாடு செய்யப்படும் இந்த மகிழ்வுச் சுற்றுலாக்கள் அறிவையும் புகட்டுகின்றன. பிரிட்டனில் 90 நாடுகளைச்சேர்ந்த மாணவர்கள் கல்வி பயிலுகிருர்கள். இவர்களில் பலர் இந்தச் சுற்றுலாக்களால் பயனடைந்திருக்கின்றனர். சுதந்திர நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் உயர்தரக் கல்வி பெறவும் தொழில் துறையில் சிறப்புப் பயிற்சி பெறவும் லண்டனுக்கு வருவதால் இந்த ஆண்டிலும் சரி, இனி வரும் ஆண்டிலும் சரி கல்வி புகட்டும் மகிழ்வுச்சுற்றுலாக்கா முன் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று சுற்றுலா அமைப்பாளர்கள் கருதுகிருர்கள்.

## போலந்தில் சென்னை மேயர்

வார்சா, மே 28

சென்னை நகரமேயர் திரு. முனுஸ்வாமியும் சென்னை நகரின் முன்னுள் உதவி மேயர்

தமிழ் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி புகுமுகப்பரீட்சை 1961 ஆயத்த வகுப்பு

மேற்படி வகுப்பு பரி. யோவான் கல்லூரியில் (St. John'sCollege,Jaffna.)ஜூன் மாதம் வெள்ளிக்கிழமை (2-6-61) பி. ப. 4 மணிக்கு ஆரம்பமாகும். இவ்வகுப்பிற் சேர விரும்பும் மாணவ மாணவிகள் மிகவிரைவில் எம்முடன் தொடர்பு கொள்க.

S. செல்லையா

21/2, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு ஜதை மேளம், ஜம் ஜம் என்று ஜமாய்த்துவிட்டது. இதெல்லாம் வீண் செலவென்று சிலர் கூறலாம். ஆனல் இந்த இசைக்கலைஞர்களை ஆதரிப்பது நிச்சயம் வீணல்ல.எவ்வளவு பேருக்கு இன்பம்! திருவிழாவே இதனுல் சோபிப்பதாகவுள்ளது.

இத்திருவிழாவையும் அந்த ஊரையும் பற்றி எவ்வளவோ எழுதலாம். இடமில்லை. எங்கோ இருந்த என்னையும் அந்தப் பிள்ளையார் இழுத்து, தனக்கு மீளா அடிமையாக்கிக் கொண்டு விட்டார்! அந்தத் திருவிழாவும் தரிசனமும் என் மனதுக்கு எவ்வளவோ ஆறுதலும் இன்பமுமளித்தது.

திரு. கோபால்ராவும் நேற்று வார்சா வந்து சேர்ந்தனர். நேற்று மாலை அவர்களிருவரும் போலந்து பிரதமமந்திரியைச் சந்தித்துப் பேசினர்.

எப்பொழுதும் உபயோகியுங்கள்

டால்மியாஸ்

★ போட்லந்து சிமெந்து

★ ஸ்டோன்வெயர் குழாய்கள்

★ பயர் பிறிக்ஸ்

செட்டிநாட்

கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

116, 118, கெய்சர் வீதி,

கொழும்பு.

# கல்வி கற்பதில் பிள்ளைகள் இன்பம் காண வேண்டும்

## தேசிய கல்விச்சபைக்கு

### வடமாகாண ஆசிரியர் சங்கம் மகஜர்

"கல்வித்துறையின் பல்வேறு பிரிவுகளிலும் பயிற்சியளிக்கக் கூடிய போதிய பாடசாலைகளோ வசதிகளோ இந்நாட்டின் எந்தவொருபகுதியிலும் இல்லை. ஆகவே இந்நிலைமை காரணமாகக் கல்வியின் விருத்தியைப் பாதிக்கச் செய்யாது அதனை விரிவாக்குவதே கல்வியின் குறிக்கோளாக இருக்க வேண்டும்" இவ்வாறு வடமாகாண ஆசிரியர் சங்கம் தேசியக் கல்விக் கமிஷனுக்குச் சமர்ப்பித்த மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

**விரிவான பயிற்சி**

அந்த மகஜரில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

எந்தப் பாடசாலையையும் தரத்தில் இறக்கக்கூடாது. கல்வியின் பல்வேறு பிரிவு என்ற தோரணையில் பாடசாலைகளை மூடக்கூடாது. தொழில்நுட்ப வழிகாட்டும் துறைகளை உள்ளடக்கி கல்வியின் பல பிரிவுகளையும் கொண்ட விரிவான பயிற்சியை அளிக்க வேண்டும்.

மக்களின் தேவைக்கேற்றவாறு பாடசாலைகள் திருத்தி அமைக்கப்படுமென நாம் எதிர்பார்க்கிறோம். பாடசாலைகளைச் சுற்றியுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை, பாடசாலைக்கு எவ்வளவு தூரத்திலிருந்து மாணவர்கள் வருகிறார்கள் என்பனவற்றைக் கொண்டு பாடசாலைச் சுற்றளவுக்கான எல்லை நிர்ணயிக்கப்படவேண்டுமென நாம் ஆலோசனை கூறுகின்றோம்.

கால் மைல் சுற்றளவுக்குட்பட்டதாக 250 மாணவர்களைக் கொண்டதாக ஆரம்பப் பாடசாலைகள் இருக்க வேண்டும். இரண்டாந்தரப் பாடசாலைகள் 850 பிள்ளைகளைக் கொண்டிருக்க வேண்டும். ஆரம்ப பிரிவை உள்ளடக்கிய தான பிரத்தியேகமான பரிபாலனத் தலைமையில் இயங்க வேண்டும். இரண்டாந்தரப் பாடசாலைகள் அவற்றுக்கென ஒதுக்கப்பட்ட ஆரம்பப் பாடசாலைகளிலிருந்து மாணவர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

அறிவை அமுக்காமல் போதிய திறமையை அளிக்கக் கூடியதான கல்வியைப்பெற வேண்டும். பிள்ளைகள் படிப்பில் இன்பங்காண வேண்டும்.

**இளைஞர் ஆற்றல்**

நாட்டின் பொருளாதார சுபிட்சத்தோடு இலக்கியம், நுண்கலை, கலாச்சாரம் ஆகியவற்றை விருத்தி செய்யாவிடின் நிலையான தேசியப்பண்பாடு தோன்ற மாட்டாது. பல்வேறு இளைஞர்களிடையேயும் சுயமாகப்படைக்கும் ஆற்றலை வளர்க்கக்கூடிய வழியை வகுக்கக்கூடியதாகக் கல்வித்திட்டம் வசதியளிக்க வேண்டும்.

இதோடு சம்பந்தப்பட்ட முயற்சிகள் சூழலுக்கு ஏற்ற முறையில் உள்ளூர் ஆதரவைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக இருத்தல் அவசியம்.

திறமைவாய்ந்த பயிற்றப்பட்ட ஆசிரியர்களைப் பெறுவதற்கு தகுந்தவர்களைத் தெரிவு செய்யவேண்டும். சம்பளத்தையும் மற்றும் அது போன்ற சேவைக் கட்டுப்பாடுகளையும் கவர்ச்சிகரமாக அமைத்துக் கொண்டால் கல்வியின் தரம் உயரும்; கலாசாலைகளும் தரத்தில் உயரும்.

**தேசியசபை**

ஆசிரியர் பயிற்சி, அவர்கள் நியமனம், மேற்பார்வை, கட்டுப்பாடு முதலிய ஆசிரியர் சம்பந்தமான சகல விஷயங்களையும் கவனிப்பதற்கு தேசியசபை ஒன்று அவசியமென்பதை வற்புறுத்துகிறோம்.

## தென்கொரியாவில் இராணுவச் சட்டம் தளர்த்தப்பட்டது

தென்கொரியாவில் புரட்சி ஏற்பட்டபின் புரட்சி அரசாங்கம் விதித்த இராவணுவச் சட்டங்கள் தளர்த்தப்பட்டுவருகின்றன. பத்திரிகைத் தணிக்கைச் சட்டமும் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாகவும் ஊரடங்குச் சட்டம் நள்ளிரவு முதல் அதிகாலை 4 மணிவரைதான் இப்பொழுது அமுலிலுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## சபைமுதல்வருக்கு பதிலாக மைத்திரிபாலா

கொழும்பு, மே 28

பார்லிமெண்ட் சபை முதல்வர் திரு. ஸி. பி. டி' சில்வா வெளிநாடுசென்றுள்ளதால் அவருக்குப் பதிலாககைத் தொழில் வீடமைப்பு, கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா சபை முதல்வராகக் கடமையாற்றுவார்.

சென்ற வருடம் திரு. ஸி.பி.டி' சில்வா வெளி நாடுசென்றிருந்தபோதும் திரு. மைத்திரிபால சேனநாயக்காவே அவருக்குப் பதிலாககடமையாற்றினர்.

## இந்தியாவில் லாவோஸ் பூன்ஊம்

புதுடில்லி, மே 28

லாவோஸின் வலதுசாரி அரசாங்கத்தின் தலைவர் திரு. பூன்ஊம் கம்போடியப் பிரதமரின் அழைப்பை ஏற்று அவரைச் சந்திப்பதற்காக நேற்று கல்கத்தா வழியாக ஜெனிவாவுக்குச் சென்றார்.

லாவோஸில் சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷன் சிறந்த பணியாற்றுகிறதென்றும் கமிஷனுக்கு தாங்கள் பூரண ஒத்துழைப்பளிப்பதாகவும் அவர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

# புதருக்குள் கிடந்த சாக்கில் இளைஞனின் பிரேதம்

## ஊரெழுவில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், திங்கள்

28 வயது இளைஞர் ஒருவரின் உயிரற்ற சடலம் சாக்கு ஒன்றினுள் வைத்துக் கட்டப்பட்டு புதருக்குள் கிடக்கக் காணப்பட்டது.

நீர்வேலி பழைய டச் வீதிக்கு அருகிலுள்ள புதருக்குள் கிடந்த ஒரு சாக்கினுள் அழுகிய நிலையில் காணப்பட்ட ஒரு பிரேதத்தை பொலிசார் கண்டெடுத்தனர்.

ஊரெழுவைச் சேர்ந்த மாரிமுத்து மார்க்கண்டு என்ற மணமான 28 வயது இளைஞனின் சடலம் என்று அடையாளம் காணப்பட்டது.

பிரேத பரிசோதனையின் போது மார்க்கண்டு தடியால் அடித்துக் கொல்லப்பட்டதாகவும் பின்னர் சாக்கு ஒன்றினுள் கட்டி வீசப்பட்டதாகவும் தெரிய வந்தது.

மாரிமுத்து மார்க்கண்டுவின் இடுப்பில் காதல் கடிதங்கள் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக ஊரெழுவில் உள்ள ஓய்வுபெற்ற ஓவர்சியர் ஒருவருடைய வீட்டில் வேலை செய்யும் மாடசாமி என்னும் இந்தியர் ஒருவரை பொலிசார் சந்தேகத்தின் மீது கைது செய்துள்ளனர்.

மாடசாமியை விளக்க மறியலில் வைக்கும்படி நீதவான் அரசு வால்டன் உத்தரவிட்டார். பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## ஆனைக்கோட்டை கொலை வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

ஆனைக்கோட்டை கொலை வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் அரசு வால்ட்டன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஆனைக்கோட்டையில் ஆர். குமாரசாமி என்பவரைக் கத்தியாற்குத்திக் கொலைசெய்ததாக எஸ். தம்பித்துரை என்பவர் மீது குற்றஞ்சாட்டி இவ்வழக்கு தொடரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் எம். வல்லிபுரம் விசாரணையை நடத்தினர். திரு. அல்பிரட் துரையப்பாவின் அனுசரணையுடன் திரு. கணேசலிங்கம் எதிரியின் சார்பில் ஏற்பட்டார்.

சத்திரசிகிச்சை டாக்டர் ஸி. மயில்வாகனம் சாட்சியமளிக்கையில் காலஞ்சென்றவரைத் தான் பரிசோதனை செய்ததாகவும் அவரதுநெஞ்சில் பலமான கத்திக்குத்துக் காயமிருந்ததாகவும் கூறினர்.

பிரேதபரிசோதனை நடத்திய டாக்டர் கனகசபை சாட்சியமளித்த பின் மேல் விசாரணை ஜூன் மாதம் 6ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## புகையிரத பகுதியிடமிருந்து நஷ்டஈடு

யாழ்ப்பாணம், சனி

வடபகுதி விவசாய விருத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் புகையிரதப் பகுதியிடமிருந்து ரூ 1000 நஷ்டஈடு கோரியுள்ளதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்துக்கு சென்ற 16-ம் திகதி ரயில்மூலம் அனுப்பப்பட்ட 136 அந்தர் விதை வெங்காயம் 22-ம் திகதியே இங்கு வந்து சேர்ந்தது. இதனால் சுமார் 60 அந்தர் வெங்காயம்சேதமடைந்ததாகவும், இதற்கான நஷ்டஈடாகவே ரூ. 1000 புகையிரதப்பகுதியாரிடம் சமாஜம் கோரியுள்ளதாக அறியப்படுகிறது.

தரமுயர்ந்த வெங்காயத்தை இங்கு செய்கைபண்ணும் முயற்சிக்கு முன்னேற்பாடாகவே இவ்விதை வெங்காயம் இந்தியாவிலிருந்து பெறப்பட்டது என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

## வயதிற்குறைந்த அமைச்சர்

### தற்காலிக நியமனம்

கொழும்பு, மே 28

விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சார மந்திரியின் நிரந்தரக் காரியதரிசியான திரு. எம். தென்னக்கோன் தற்காலிக அமைச்சராகக் கடமையாற்றுகிறார்.

திரு. சி. பி. டி'சில்வா நேற்று முன்தினம் வெளிநாட்டுக்குப் பிரயாணமானதைத் தொடர்ந்து இந்த நியமனம் நடைபெற்றது.

திரு. தென்னக்கோன் (26) பார்லிமெண்டில் வயதில் ஆகக் குறைந்தவர். இதற்குமுன் இப்படியான இளைஞர் ஒருவர் தற்காலிக அமைச்சர் பதவியை வகித்ததில்லை.

1956ம் ஆண்டிலிருந்து நிக்கரவெட்டிய தொகுதிப் பிரதிநிதியாக இவர் அங்கம்வகிக்கிறார். முதன்முறை போட்டியிடும் போது இவருக்கு வயது 21.

## சில்சார் துப்பாக்கிப்பிரயோகம்

### விசாரணை செய்ய நீதிபதி நியமனம்

சில்லாங், மே 28

சில்சாரில் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தது சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கு திரு. கோபால்ஜிமெஹ்ரோத்ரா என்ற நீதிபதியை அஸ்ஸாம் அரசாங்கம் நியமித்துள்ளது.

திரு. மெஹ்ரோத்ரா இம்மாதம் 30-ந் திகதி அஸ்ஸாம் ராஜ்ய பிரதம நீதியரசராகப் பதவியேற்பார்.


**யாழ்ப்பாணத்தில் ஓர் புதிய சாதனை!**

உங்கள் காப்பியின் தரம்
குணம், மணம்
எந்நாளும் ஒரேவிதமாக அமைகிறதா?

இதோ நாங்கள் பெரும் பணச்செலவில்
தருவித்துள்ள நவீன

**எலக்ரிக் ரோஸ்டர்**

மூலம்

14 றுத்தலுக்குக் குறையாமலும் அதற்கு மேலும்
உங்களுக்குத் தேவையான காப்பியை வறுத்து
அரைத்து அரை மணி நேரத்தில் குணம், மணம்
நிறைந்த காப்பித்தூளைத் தருகிறோம்.

ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள்!

குறைந்த செலவில் குறித்த நேரத்தில்
காப்பித்தூள் தயாரிக்கப்படுகிறது!

**Mohamedally Abdullaly**

**முகம்மது அலி அப்துல் அலி**

5 & 7, பெரியகடை, யாழ்ப்பாணம்.

போன்: 515